**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

**Calendar Case No.292 of 2023**
**Prosecution Witness**:PW4

| | | | |
|---|---|---|---|
| Name | ராஜவேல்(PW4) | | |
| Father Name | வெள்ளைச்சாமி | Calling | காவல் ஆய்வாளர் |
| Village | கேத்தி காவல் நிலையம் | Religion | |
| Taluk | குன்னூர் | Age | 50 |
| District | நீலகிரி | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th day of July **2026** by Thiru. Kulandaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது நீலகிரி மாவட்டம் கேத்தி காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் அவிநாசி வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்த சமயத்தில் கடந்த 04.07.2023 ஆம் தேதி சேயூர் நிலைய தலைமைக் காவலர் மகாலிங்கம் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது வெள்ளியங்கிரி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.160/2023 சட்டப்பிரிவுகள் 279, 304(A) of IPC ன்-கீழ் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து வழக்கு கோப்பை உதவி ஆய்வாளர் பழனிச்சாமி என்பவரின் புலன் விசாரணைக்கு வைத்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**

உதவி ஆய்வாளர் பழனிச்சாமி இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 04.07.2023 காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஈஸ்வரமூர்த்தி, சதீஸ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்நிலையில் அன்றைய தினமே வழக்கில் இறந்துபோன பிரபாகரன் என்பவரின் பிரேதத்தின் மீது திருப்பூர் அரசு மருத்துவமனை சவக்கிடங்கின் முன்பு வைத்து காலை 09.30 மணிமுதல் 12.00 பிரேத விசாரணை செய்து பிரேத

விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். அந்த **பிரேத விசாரணை அறிக்கை (அ.சா.ஆ.5)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சடலத்தை உடல் கூராய்விற்கு அனுப்பி வைத்துள்ளார். பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 வரையிலானவர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். பின் இவ்வழக்கை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 11.07.2023 ம் தேதி நிலையம் ஆஜரான எதிரியை கைது செய்து, தக்க பிணையில் விடுவித்தேன். விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களை மோட்டார் வாகனத்தை ஆய்விற்கு அனுப்பி வைத்தேன். 24.08.2023 ம் தேதி மோட்டார் வாகன ஆய்வாளர் பாஸ்கரன் என்பவரை விசாரித்து TN 39 DW 1608 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம் மற்றும் TN 20 BK 8404 பதிவு எண் கொண்ட Maxi Cab ஆகியவற்றிற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றேன். அந்த **மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் (அ.சா.ஆ 6 மற்றும் அ.சா.ஆ.7 ) ஆக குறியீடு** செய்யப்படுகிறது. அன்றைய தினமே இறந்து போன பிரபாகரன் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் சிவக்குமார் என்பவரை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். அந்த **பிரேத பரிசோதனை அறிக்கை (அசாஆ.8)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

24.08.2023 இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279, 304(A) of IPC ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு)</u>**

விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தின் எந்த பகுதி நான்கு சக்கர வாகனத்தின் எந்த பகுதியின் மீது மோதியது என்று என்னுடைய விசாரணையில் எந்த சாட்சிகளும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்தில் இறந்து போன பிரபாகரன் வாகனம் ஓட்டும்போது தலைக்கவசம் அணிந்து இருந்தாரா என்ற விபரத்தை சாட்சிகள் என்னுடைய விசாரணையில் சொல்லி உள்ளார்களா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் இருந்து வாகனங்களின் உடைந்த பாகங்கள் ஏதாவது கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு அருகில் வசிக்கும் நபர்கள் யாரையும் நான் சாட்சியாக விசாரிக்க வில்லை என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகள் அனைவரும் காலமான பிரபாகரனின் உறவினர்கள் என்றால் சரியல்ல. விபத்துக்குள்ளான வாகனங்கள் இரண்டும் 12.07.2023 தேதி அன்றுதான் வாகன ஆய்விற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையும் நீதிமன்றத்திற்கு ஆறு நாட்கள் கால தாமதமாக தான் அனுப்பி வைக்கப்பட்டது என்றால் சரிதான். சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் முதல் தகவல் அறிக்கை எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை என்றும் வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கு விபத்தில் இறந்து போன பிரபாகரன் என்பவருக்கு நஷ்ட ஈடு பெறும் நோக்கத்தோடு எதிரி மீது ஒருதலை பட்சமாக குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கத்திற்கும் இந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:–** இல்லை.

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |